**இலங்கை தென் மேற்குப் பகுதியில் நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டத்தின் (கட்டம்- 01) - 2019**

இலங்கை தென் மேற்குப் பகுதியில் நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டத்தின் (கட்டம்- 01) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 யூன் 01 ஆந் திகதிய சீஎல்கே 1013 - 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு மற்றும் 2016 மார்ச் 18 ஆந் திகதிய சீஎல்கே 1013- 02 எல் ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கை மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் குறிக்கோள்களாவன, (அ) நீர்கொழும்பு மாநகர சபை பகுதியில் 73,000 மக்களிற்கான விரிவாக்கப்பட்ட கழிவுநீர் சேகரிப்பு சுத்திகரிப்பு முறைமை மற்றும் சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை முன்னேற்றுதல், (ஆ) தண்ணீர் மற்றும் சுகாதார துறை கட்ட வேலைகளை தெளிவுபடுத்தல் தரமுயர்த்துதல், (இ) வறுமைக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட வறுமைக் குறைப்பின் கொள்கைகள் அபிவிருத்தி ஊடாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களிற்கான சேவைக்கு நுழைவு வசதிகள், (ஈ) கடலமுக்கம் மற்றும் கடற்சுழற்சச்சி தந்திரோபாயம் மற்றும் அமுக்கம் மற்றும் உயிரணுவியல் பராமரிப்பு என்பனவாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 18,739.81 மில்லியனிற்கு சமமான யூரோ 107.70 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,224 மில்லியனிற்கு சமமான யூரோ 76 மில்லியன் கடனாகவும் ரூபா 991.81 மில்லியனிற்கு சமமான யூரோ 5.70 மில்லியன் மானியமாகவும் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவர் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 4,524 மில்லியனிற்கு சமமான யூரோ 26 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கபட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்துவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம்

ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கூற்றின் பிரகாரம், நேரடிக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 435.56 மில்லியனிற்கு சமமான யூரோ 2.17 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிராகாரம், இது ரூபா 540.86 மில்லியனிற்கு சமமான யூரோ 2.69 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. செயற்திட்ட அலுவலகம் ரூபா 105.29 மில்லியனிற்கு சமமான யூரோ 0.52 மில்லியன் வித்தியாசங்களை | 105.29 | நிதிக்கூற்றின் வெளிப்படுத்தலை தவறவிட்ட மீதிகள் இணக்கம் செய்யப்படாமை | 2019 இன் கடைசி நான்கு மீளெடுப்புகள் மற்றும் நாணய மாற்று வீதம் என்பவற்றினை ஈஆர்டி அறிக்கையில் பதிந்திருக்காமை இதற்கான காரணமாகும், | மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இணங்கண்டு இணக்கம் செய்திருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரடிக் கொடுப்பனவுகளின் தொகையை திருத்துவதற்கு செயற்திட்ட அலுவலகமோ அல்லது வெளிநாட்டு வளங்கள் திணைக்களமோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்**

| | நடவடிக்கை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயராற்றல் எதிர்பார்க் கப்பட்டது | உள்ள படியானது | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | நீர் கொழும்பு கழிவகற்றல் முறைமைக்காக இறைக்கும் இல்லம் மற்றும் வீட்டு இணைப்புக் களுடன் சேகரிப்பு முறைமையின் நிர்மாணம் | ஒப்பந்தமான து 2019 இல் வழங்கப்பட வேண்டுமெ ன பட்டியலிடப் பட்டது | ஒப்பந்தமான து 2020 ஆகஸ்ட் 31 வரை வழங்கப்பட்டி ருக்கவில்லை | நீர் கொழும்பில் சுகாதார சேவைகளை முன்னேற்றுவதி ல் தாமதம். | வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனை (டிஎஸ்சீ) ஒப்பந்தம் கொள்வனவில் உள்ள தாமதமே ஆரம்பத்தில் தாமதமாகும். எவ்வாறாயினும், ஏப்ரல் 21 நிகழ்வு மற்றும் நிலவிய கோவிட-19 நோய்த் தொற்று காரணமாக வடிவமைப்பு பூர்த்தியாக்க முடியவில்லை. | 2022 யூன் மாதத்தில் கடன் முடிவடைவாதால் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட பகுதியில் குறைந்த வருமான சமூகத்தினரின் சுகாதார வசதிகளின் முன்னேற்றம் | ஒப்பந்தங்கள் 2018 யூனில் வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப் பட்டது | 2020 ஆகஸ்ட் 31 வரையும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டி ருக்கவில்லை. | செயற்திட்டப் பகுதியில் சுகாதார வசதிகளின் முன்னேற்றம் தாமதப்படல் | கொள்வனவு நடைமுறையில் குறிப்பிடத்தக்களவு தாமதம். இத்தாமதம் ஒட்டு மொத்த இலக்குகளும் தாமதப்படும். | கொள்வனவு நடைமுறையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கொள்கை மற்றும் நிறுவன | 93 % | 32 % | கழிவகற்றல் துறையின் | கொள்வனவு தாமதப்பட்டமை | கொள்வனவு நடைமுறையை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ரீதியான தரமுயர்த்தல் ஆலோசனை (பீஜஈசீ) | | | கொள்கை மற்றும் நிறுவன கட்டமைப்பு வேலையின் தரமுயர்த்தல் தாமதப்படல் | ஆரம்பத்தில் தாமதம். புதிய இலக்கு திகதி 2020.09.05 ஆக உள்ளது எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தம் நிலவிய கோவிட் -19 தொற்று நோயால் பாதிக்க கூடும். | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கழிவகற்றல் முகாமைத்துவ திறன் அபிவிருத்தி ஆலோசனை (எஸ்எம்எஸ்டிசீ) | கொள்வனவு நடைமுறை 2018 நவம்பரில் தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப் பட்டது. | கொள்வனவு நடைமுறை தொடங்கப் பட்டிருக்கவில்லை. | கொள்வனவு நடைமுறை தாமதம் செயற்திட்ட நோக்கங்களை பாதகமாக பாதிக்கும் | ஆரம்பத்தில் கொள்வனவு நடைமுறை தாமதம் காரணமாக பீஜஈசீ ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம், ஆலோசனையாளர் வேலையை தொடங்குவதிலுள்ள தாமதத்திற்கு பங்காற்றியது. இந்த ஒப்பந்தத்திற்கு ஆலோசனையாளர் கெள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கு பொறுப்பாக உள்ளார் | கொள்வனவு நடைமுறையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | வடிவமைப்பு மற்றும் ஆலோசனை மேற்பார்வை (டிஎஸ்சீ) | 61 % (நீர்கொழும்பு, கால, களணி பகுதியில் சாத்திய வளக் கற்கை) | 25 % (மூன்று பகுதிகளிலும் சாத்திய வளக் கற்கை தொடருகின்றன) | ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் செயற்திட்ட நோக்கங்களை பாதகமாக பாதிக்கும் | ஆரம்பத்தில் கொள்வனவு நடைமுறையில் உள்ள தாமதமே முதலில் தாமதமாகும். இந்த ஒப்பந்தம் 2018.08.21 இல் தொடங்கப் பட்டதுடன் இதன்படி, வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்கள் 2020 பெ்ரவரி அளவில் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட அளவீட்டு | வேலையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வேலைகளில் தடை, நிலவிய கோவிட்-19 நோய் தொற்று காரணமாக பல நாடுகளால் விதிக்கப்பட்ட பிரயாணத் தடை என்பனவற்றால் பட்டியல் திகதியை விட பின்தங்கி இருந்தது. 2021.01.20 வரை கால நீடிப்பு வழங்கப் பட்டிருந்தது. | |
| (ஊ) காணி சுவீகரிப்பு | நீர்கொழும்பு 12 எண் காணி, காலி 17 எண் காணி மற்றும் உனவத்துன வில 07 எண் காணி | காணிச் சுவீகரிப்பு செயற்பாடு நடைமுறையில் உள்ளது. | காணி உறுதியை மாற்றுவதிலுள்ள தாமதம் செயற்திட்ட நடவடிக்கையை பாதகமாக பாதிக்கும். | காணிக்கு நுழைவுப் பாதை இருப்பதை நிர்மாணம் தொடங்குவதற்கு முன்னர் உறுதிபடுத்த வேண்டும். | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை காணியின் உரிமையை மாற்றி பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வெண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2016 இல் உடன்படிக்கை கையொப்பமிட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2018 இல் கடனளிக்கும் முகவரால் கடன் கைதவிர்ப்பு தொடங்கப் பட்டிருந்ததன் விளைவால் விளைவால் 2019 திசெம்பர் 31 வரை கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளில் கடப்பாட்டு கட்டணமாக ரூபா 238 மில்லியன் தொகை அறவிடப்பட்டது. | இலங்கை அரசாங்கத்திற்கு மேலதிக கிரயம் ஏற்படும் சாத்தியம். | வேலை தொடங்குவதில் தாமதம் மற்றும் வடிவமைப்பு மற்றும் கடன் கைதவிர்ப்பு தொடங்குதல் என்பவற்றின் தாமதத்தின் விளைவால் மேற்பார்வை ஆலோசனை ஒப்பந்தம் (டிஎஸ்சீ) கொள்வனவில் தாமதமான காரணத்தால் ஆரம்பத்தில் தாமதம். | ஆலோசனை ஒப்பந்தத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை காலி மாவட்டத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியை நிர்மாணிப்பதற்கு பட்டியலிடப்பட்டு செயற்திட்டத்தால் சுத்திகரிப்பு பொறியின் ஒருபகுதி வடிவமைப்பு பூர்த்தியாக்கப்பட்டது. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அந்த நோக்கத்திற்காக காணியொன்றை தெரிவு செய்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கப்பட்ட சுவீகரிப்பு நடைமுறை 2019 யூன் 17 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காணி கொள்வனவிற்காக ஏற்கனவே செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் தொடரப்பட்ட வழங்கில் தீர்ப்பு பெறுவதிலுள்ள தாமதம் காரணமாக 22 யூன் 30 வரையும் காணியின் சட்டரீதியான உரிமையாண்மையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மாற்றியிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மேலதிக கிரயம் ஏற்படும் சாத்தியம் | காலி நகர சபை பகுதியல் கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறி நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக காலி நான்கு கிராம சேவகர் பகுதிக்குள் தடல்லவில் அமைந்திருந்த 4 ஏக்கரும் 33 பேர்ச்சும் விஸ்தீரணமுள்ள ‘‘கனத்தவத்தை’’ என அழைக்கப்பட்ட காணிச் சுவீகரிப்பை வர்த்தமாணி வெளியிடும் கட்டளை மூலம் (2013/11/13 ஆந் திகதிய இல 1836/16) கௌவர அமைச்சர், 1974 இன் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அதிகாரச் சட்டத்தின் 92 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் அனுமதித்திருந்தார்<br><br>காணி சுவீகரிப்பு நடைமுறைகளை செயற்படுத்துகின்ற அதேநேரம், பின்னர் சபை தீர்மானத்தின் ஊடாக சொல்லப்பட்ட காணியை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியை கொள்வனவு செய்வதில் சட்டச் சிக்கல்கள் காரணமாக நிறுத்தப் பட்டிருந்ததுடன் சட்டச் செயற்பாடுகள் ஊடாக முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>தெரிவு செய்யப்பட்ட காணி அந்நோக்கத்திற்காக தொழில்நுட்ப ரீதியாக மிகவும் பொருத்தமானதாக | காணிச் சுவீகரிப்புகள் வினைத்திறனான, சிக்கனமான மற்றும் ஆக்கபூர்வமான வழியில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

உள்ளது, கௌரவ அமைச்சர் சுவீகரிப்புக்கு கட்டடளை வெளியிடப்பட்ட வர்த்தமாணி மூலம் 2015/04/01 ஆந் திகதிய 1908 ஆம் இலக்கம்) திரும்பவும் தடவை அனுமதித்தார்.

இதன்படி, பணிப்பாளர் சபையானது 2018 மே 08 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவையானது.

1. 1994 இன் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அதிகாரச் சட்டத்தின் 92 ஆம் பிரிவினை பின்பற்றி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேற்குிப்பிட்ட காணியை சுவீகரிப்பதற்கு. (SHIFT செயற் திட்டத்தின் கீழ் வருகின்ற காலி WWMS இன் கற்கைக் கட்டம். பிஎம்யூ ஆல் காணி சுவீகரிப்பு செய்பாடு மாத்திரம் குறிப்பிடப்படடிருந்தது).
2. காணி கொள்வனவு தொடர்பில் திரு.ஜே.எம். கருணாரத்னாவிற்கு ஏற்கனவெ செய்யப்பட்ட முற்பணக் கொடுப்பனவை அறவிடுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் கீழ் ஏற்கனவே தொடங்கப்பட்ட நட்ட நடவடிக்கையை தொடருவதற்கும் பொறுப்புடைய உத்தியோகர்தர்களிற்கு எதராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும்.

### 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றில் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை உள்ளக கணக்காய்விற்கு உட்ப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிதிக் கட்டுப்பாடு நலிவாகவுள்ளது | கருததுரைகள் தெரிவிக்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |